**ரத்தொட்ட பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 09 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தொட்ட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டினுள் ஒப்பந்தம் செய்யப்படாத அல்லது முடிக்கப்படாத 2 நிர்மாணங்களின் பெறுமதியாகிய ரூபா 1,200,000 கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டதன் காரணமாக வருடத்தின் செலவினங்கள் மற்றும் கடன்கொடுத்தோர் அபபெறுமதியினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2 நிர்மாணங்களின் செலவினங்கள் சரியாக காட்டப்படாததன் காரணமாக மூலதனச் செலவு மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 28,774 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) பௌதீக நிலைப்பாடற்ற ரூபா. 634,455 பெறுமதியான 6 கட்டிடங்களில் ரூபா. 15,330 பெறுமதியான 2 இழுவண்டிகள் மற்றும் ரூபா. 327,500 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டினுள் இறுதிக் கொடுப்பனவு மற்றும் நிறுத்தப்பட்ட கொடுப்பனவு என்பன செலுத்தி முடிக்கப்பட்ட 4 நிர்மாணங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய கடன்பட்டோராக ரூபா. 48,791 காட்டப்பட்டிருந்ததால் கடன்பட்டோர் மீதி ரூபா. 48,791 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) (i) மீளாய்வாண்டினுள் மீளச் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 48,837 பெறுமதியான நிர்மாண நிறுத்தப்பட்ட கொடுப்பனவு நிதி சரியாக கணக்கிடப்படாததன் காரணமாக ஒரே பெறுமதியினால் வருடத்தின் மூலதனப் பெறுவனவுகள் கூடுதலாகவும் கடன் கொடுத்தோர் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிட்ட மீளச்செலுத்தப்பட்ட நிதி கடன்பட்டோருடன் இணக்கமடையாமை மற்றும் நிர்மாணத்துடன் தொடர்பான பெற வேண்டிய தேவையற்ற மேலும் ரூபா. 14,255 கடன்படுநராக காட்டப்பட்டதனால் கடன்படுநர் மீதியும் ரூபா. 63,092 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2017 ஆம் ஆண்டு ஏலவிற்பனையில் ஒதுக்கப்பட்ட போதும் கணக்குகளிலிருந்து ஒதுக்கப்படாததன் காரணமாக வருடத்தின் இயந்திர மற்றும் இயந்திர உபகரண மீதி ரூபா. 291,750 மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துதல் கணக்கின் மீதி ரூபா. 41,385 கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(எ) புறநெகும திட்டத்தின் கீழ் நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த ஒரு கழிவு பதப்படுத்தல் இயந்திரம், ஒரு நோயாளர் கட்டில் மற்றும் 2017 ஆம் ஆண்டின் தொகை மதிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட 1” ஜீஐ குழாய் (கொடிக் கம்பம்)

134 இன் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிர்மாண கோவைகளுக்கமைவாக 2016ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 4 கட்டிடங்களின் பெறுமதியாகிய ரூபா. 1,862,172 மூலதனமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியசாலை கடன்படுநர் மீதி ரூபா. 4,840,350 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா. 415,360 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) ஐந்தொகையில் இறுதி இருப்புப் பெறுமதி ரூபா. 69,900 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) 2005 ஜுன் 27ஆம் திகதிய 2746 இலக்க உறுதிப்பத்திரத்தின் கீழ் சபைக்கு உரிமையளிக்கப்பட்டிருந்த ரூபா. 25,000 பெறுமதியான 24 பேர்ச் பரப்புள்ள பண்டாரபொல எஸ்.கே. எனும் காணியின் பகுதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 76,362,599 ஆன 6 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் அவற்றிக்கான துணைப் பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்ட மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட வேறுபாடு ரூபா 16,228,871 ஆன வித்தியாசம் நிலவியது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

1997 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 15,462 தொகையான தொங்கல் கணக்கின் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 11 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,709,749 ஆனதுடன், 5 ஆண்டு காலத்தையும் விஞ்சிய தீர்வுசெய்யப்படாமல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 4,433,115 ஆன மீதிகள் அதில் உள்ளடங்கப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,172,305 ஆனதுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டு காலத்தையும் விஞ்சிய தீர்வு செய்யப்படாமல் காணப்டும் கூட்டுத்தொகை ரூபா 1,167,714 ஆன மீதிகள் அதில் உள்ளடங்கப்பட்டிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் காரணமாக ரூபா 178,359,446 கூட்டுத்தொகையான 7 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தன.

### 1.3.6 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | | |
| (அ) விதி 69 | | காணி விற்பனை மீது வரி தொடர்பான பதிவேடொன்று பீ.எஸ் 26 மாதிரியின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) விதி 115 | 857,083 | களஞ்சிய பொருட்கள் கிடைத்ததாகவும் உரிய பொருட் பதிவேட்டிலோ இருப்பு பதிவேட்டிலோ உள்ளடக்கப்பட்டதாக சான்றிதழொன்று மூலம் உறுதிப்படுத்தப்படாமல் ஆயுர்வேத மருந்துகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) விதி 217 | | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பீ.எஸ்.46 பிரகாரம் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) விதி 218 | | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் சிறு வீதிகள், மயானங்கள், விளையாட்டரங்குகள், பொதுக் கணிறுகள் தொடர்பாக சபையின் ஆரம்பம் முதல் இதுவரை மெய்மையாய்வு செய்யப்பட்டிக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 9,683,851 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 16,758,888 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 8,612,000 | 9,291,442 | 7,692,173 | 9,326,463 | 6,287,900 | 8,098,641 | 7,343,989 | 7,735,636 |
| (ii) | வாடகை | 2,220,000 | 2,524,000 | 2,051,685 | 1,233,756 | 2,428,000 | 2,207,477 | 2,106,786 | 761,470 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 900,000 | 992,460 | 992,460 | 405,686 | 850,000 | 963,600 | 963,600 | 405,686 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,495,000 | - | 1,803,055 | - | 1,403,300 | - | 1,836,329 | - |

## 2.2.2 வீதவரியும் வரிகளும்

### (அ) வீதவரியும் வரிகளும்

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி வருமான மீதி ரூபா 1,539,310 ஆக இருந்ததுடன் அம்மீதியினுள் 1 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 309,960 ஆன மீதி உள்ளடங்கியிருந்தது.

(ii) சபையின் ஆவணங்களில் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமடைந்த பிரதேசமாக வெளியிடப்படாத மற்றும் மதிப்பீட்டிற்கு உட்படாத 19 ஆதனங்களுக்குரிய நிகவெல்ல பாதை வீடுகளின் அறவிட வேண்டிய ரூபா 365,064 ஆன வீதவரி மீதியொன்றும் நிலவியது.

### (ஆ) ஏக்கர் வரி

பிரதேச சபை சட்டத்தின் 134(3) இன் பிரகாரம் அமைச்சரால் விசேட பிரதேசங்களாக பெயரிடப்படாதிருக்கையில் ஏக்கர் வரிக்காக பட்டிலிடப்பட்டதன் கரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 365,331 ஆக இருந்ததுடன் அம் மீதிக்கு 1 முதல் 5 வருடம் இடையிலான காலத்தை விஞ்சிய ரூபா 125,664 ஆன மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தது.

### (இ) நீர்க் கட்டணம்

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி நிலுவையாகவிருந்த நீர்க் கட்டண மீதி ரூபா 7,421,822 ஆக இருந்ததுடன் அம்மீதியில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 1,257,266 மீதி உள்ளடங்கியிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் இணைப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 4529 நீர்ப் பாவனையாளர்களில் 187 பேருக்கு மாத்திரம் நீர்மானிகள் பொருத்தப்பட்டிருந்ததனால் 4342 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து முறையான செயன்முறைக்கு மாற்றமாக மாதாந்தம் நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டு முதல் நீர் விநியோகம் இடம்பெறாத சவ்சிரிபுர நீர்ப்பாசனத் திட்டத்தின் 70 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து ரூபா. 98,165 மற்றும் உட வேரகம நீர்ப் பாவனையாளர்கள் 100 பேரிடமிருந்து ரூபா. 168,016 நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்பட முடியாத நிலைமையில் காணப்பட்டது.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மீதி ரூபா 405,686 ஆனதுடன் அது 5 ஆண்டுகளுக்கு முன்னிருந்து நிலவிய மீதியாகும்.

### 2.2.4 குத்தகை வாடகை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை குத்தகை வாடகை மீதி ரூபா 1,233,756 ஆக இருந்துடன் அம்மீதியல் ஓராண்டிற்கு மேற்பட்ட ரூபா 530,166 நிலுவை மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 690,500 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 9,011,050 ஆக இருந்தது.

## 2.3 மிகை அறவீடு

பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 912,514 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், 2018 யூன் 8 ஆந் திகதி வரை ரூபா 130,586 அறவிடப்பட வேண்டியிருந்தது.

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 2 பிரதான காரணங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை

மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்ட கொள்கை உரையின் பிரகாரம் குருவாவ சிறுவர் பூங்காவின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு பிரதேசத்தில் வசிக்கும் பிள்ளைகளின் வினோதத்திற்காக வசதிகளை வழங்குவதல் விசேடமாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் குருவெவ சிறுவர் பூங்காவின் சிறுவர் பூங்கா உபகரணங்கள் கொள்வனவு மற்றும் அபிவிருத்திக்காக 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2,847,305 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படக்கூடிய வகையில் சிறுவர் பூங்காவின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

2017 ஆம் ஆண்டில் பிரதேச சபை நிதியத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 5,550,000 இற்கான 9 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் 2018 மார்ச் 20 ஆந் திகதி வரிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

(i) அதிகாரப் பிரதேசத்தினுள் நாளாந்தம் சேரும் சுமார் 2 தொன் கழிவுகள் சபைக்குச் சொந்தமான 2 உழவு இயந்திரங்கள், கம்பக்டர் இயந்திரமொன்று மற்றும் 10 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு நாளாந்தம் சுமார் 15 கிலோ உரம் உற்பத்தி செய்யப்படுவதுடன் கொம்போஸ்ட் உர உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாத உக்காத கழிவு சுமார் 25 வீதம் அளவில் குவித்து வைக்கப்படும் முறையும் பின்பற்றப்பட்டு வந்தது.

(ii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா. 1,919,223 செலவில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த குருவாவ கழிவு வேறாக்கல் நிலையம் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன் கழிவு வேறாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்படும் முறை தொடர்பான முறையான திட்டமொன்று காணப்படவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் கீழ் சபையின் மூலம் நகரின் வியாபார நிலைமையை அதிகரித்தல் மற்றும் சுத்தமான நீர் மற்றும் ஆரோக்கியம் போன்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்குரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதற்காக நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே போதியளவான பதவியணியினர் இல்லாமை, வளங்கள் குறைவாக இருந்தமை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக போதியளவில் அறிவுடன்கூடிய பதவியணியினரொன்று இல்லாமை போன்ற குறைபாடுகள் காரணமாக அந்த இலக்கை அடைந்து கொள்வதில் சிக்கலான நிலைமையொன்று காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

1999 ஆம் ஆண்டிலிருந்து 2010 வரையான காலப்பகுதியில் ரூபா 174,687 ஆன முற்பண மீதியொன்று தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

ஓய்வுப் பெற்ற, சேவையை விட்டுச் சென்ற, இறந்த அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 56,656 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளினுள் பெறப்பட்டிருந்த 118 கட்டிட விண்ணப்பப்பத்திரங்களில் 97 விண்ணப்பப்பத்திரங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் 11 விண்ணப்பப்பத்திரங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/3 ஆம் இலக்க மத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் 5(i) பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கைகாவல பிரதேசத்தில் அமைந்துள்ள 9 கடைகளுக்கு 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2011 ஜனவரி முதல் 2017 வரையிலும் கடைகளுக்கான வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன், ரீ.டீ.ஜயரத்ன மாவத்தையில் அமைந்துள்ள 4 கடைகளுக்கும் வாடகை திருத்தம் செய்யப்படாமல் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2012 பெப்ரவரி முதல் ரூபா 1,000 மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(இ) ரீ.டீ.ஜயரத்ன மாவத்தையில் அமைந்துள்ள 22 ஆம் இலக்க கடை தொடர்பாக மாகாண மதிப்பீட்டாளரினால் 2009 ஆம் ஆண்டில் மாதாந்த வாடகை மதிப்பிடப்பட்டிருந்த போதும், அம்மதிப்பீடு தொடர்பான எதிர்ப்பின் மீதான திருத்தப்பட்ட மதிப்பீடொன்றினை செய்து கொள்வதற்கு முடியாமல் போயிருந்தது. அதனடிப்படையில் 2010 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுக்கூட்டத் தீர்மான இலக்கம் 4.4.11 இன் பிரகாரம் கடைகளின் வாடகை திருத்தம் செய்யப்பட்டு மதிப்பிடப்பட்ட வாடகையை விடக் குறைவான வாடகை அறவிடப்பட்டிருந்ததன் காரணமாக 2011 ஜனவரி முதல் 2017 திசெம்பர் வரை ரூபா 2,013,060 சபை இழந்திருந்தது.

(ஈ) ரன்ஜன் விஜேரத்ன மாவத்தை கீழ் மாடியில் அமைந்துள்ள 20 கடைகள் தொடர்பில் மாகாண மதிப்பீட்டாளரினால் 2009 ஆம் ஆண்டில் மாதாந்த வாடகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதை விடவும் குறைந்த வாடகை சபையினால் அறவிடப்பட்டிருந்தமை மற்றும் 5 வருடங்களுக்கொரு முறை வாடகை திருத்தம் செயவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக 2011 ஜனவரி முதல் 2017 திசெம்பர் வரை சபை இழக்க நேர்ந்த தொகை ரூபா. 411,720 ஆக இருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை

2017 மே 22 ஆந் திகதி முதல் செயற்படாதிருந்த குரு கெப் வண்டியின் மைலோ மீற்றர் 2017 திசெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் மீண்டும் சீர்செய்யப்படாதிருந்ததுடன் வாகனத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 84,550 ஆன எரிபொருள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

1998 ஆம் ஆண்டின் போது மாகாண சபைகள் அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 பெறுமதியான மிட்சுபிஷி கெப் வண்டியை சபையின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாவனைக்கு எடுக்க முடியாத நிலைமையில் நிலவிய ரூபா 1,632,150 பெறுமதியான 9 வாகனங்களை கைதவிர்ப்பதற்கோ அல்லது திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டி போது ரூபா 12,751,577 செலவு செய்து 2015 மார்ச் 16 ஆந் திகதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த இரண்டு மாடிகளுடன்கூடிய வாரச்சந்தைக் கட்டிடம் விளைவற்றதாக காணப்பட்டது.

### 3.5.4 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யாமை

அங்கெலிமெடில்ல மாஉஸ்ஸாகொல்ல மயான நிலத்தின் உரிமத்தினை உறுதி செய்து கொள்ளாததன் காரணமாக தனிப்பட்ட ஒருவர் நிலத்தின் ஒரு பகுதியை அபகரித்துக் கொண்டிருந்ததுடன் அது தொடர்பான வழக்கிற்கான சட்டத்தரணிக் கொடுப்பனவாக 2011 முதல் 2017 வரை ரூபா. 89,000 செலவிடப்பட்டிருந்தது.

### 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைத் திட்டம்

அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டமொன்று, சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகைத் திட்டமொன்றும் பெறுகை கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2017 சனவரி முதல் நவம்பர் வரை ரூபா 3,898,678 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட முறையே ரூபா 217,304 மற்றும் ரூபா 822,895 தொகையான கொள்வனவுகளுக்குரிய கூறுவிலைகள் தொடர்பாக 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை 178(7)(1) விதி மற்றும் 178(7)(4) இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3(இ) மற்றும் 5.6 பிரிவின் பிரகாரம் மிகவும் சுருக்கமான மற்றும் தெளிவான விதந்துரைகள் தயாரிக்கப்படாமல் தேவையான அலுவலக உபகரணங்களின் பெயர் குறிப்பிடப்பட்டு 11 வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 3 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டு வெளிப்படை தனமையொன்று இல்லாமல் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 647,590 இற்கு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.6.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**(அ) ரத்தொட்ட பொது நூலகத்தினை வேறாக்கல்**

சபை நிதியிலிருந்து ரூபா 303,270 செலவிடப்பட்டிருந்த குறித்த திட்டத்திற்காக ரூபா. 204,876 செலவிடப்பட்டு பொருட்கள் கொள்வனவு சபையினால் மேற்கொள்ளப்பட்டு விலை மனுக் கோரல் மூலமாக தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றின் மூலம் நிர்மாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் நிர்மாணத்திற்காக முறையான மதிப்பீடொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சபையின் உள்ளக தொலைபேசி தொகுதியினை நவீனமயப்படுத்தல்**

சபையின் உள்ளக தொலைபேசி தொகுதியினை நவீனமயப்படுத்துவதற்காக 2017 மே 12 ஆம் திகதி 4 நிறுவனங்களிடமிருந்து விலை மனுக் கோரப்பட்டு பெறப்பட்டிருந்த விலைகளின் அடிப்படையில் தனியார் நிறுவன மொன்றினால் பணி நிறைவேற்றப்பட்டு ரூபா 152,750 செலுத்தப்பட்டிருந்த போதும் தேவையான தொலைபேசிகளின் எண்ணிக்கை மற்றும் ஏனைய விபரங்கள்

தெளிவாக விலை மனுக்களில் குறிப்பிடப்படாது விலைமனுக் கோரியமை காரணமாக முறையாக விலைகளை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது போயிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 7 வருமான விடயங்களுக்குரிய ரூபா 10,230,000 ஆன மதிப்பிடப்படாத வருமானங்கள் எதுவும் அறவிடப்படாமல் இருந்ததுடன் 27 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே விலகல் 46 சதவீதம் முதல் 8697 சதவீதம் வரை விலகல்கள் நிலவியது.

(ஆ) 15 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 504,800 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாமல் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 21 செலவின விடயங்கள் தொடர்பாக தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 40 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை வீச்சளவான விலகல்கள் நிலவியது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தல்

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஆக்கபூர்வமான வகையில் அக்குழு தீர்மானங்கள் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் | (i) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கூடுதலாக கணக்கீடு செய்தல் |
| | | (ii) | கடன்கொடுத்தோர் தீர்வுசெய்யப்படாமை |
| | | (iii) | கடன்கொடுத்தோரிடம் பணம் அறவிடப்படாமை |
| (ஆ) | சொத்துக்கள்/ ஆதனங்கள் | (i) | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படாமை |
| | | (ii) | நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படாமை |
| | | (iii) | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படாமை. |
| | | (iv) | ஏலத்தில் அகற்றப்பட்ட சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்படாமை |
| | | (v) | சொத்துக்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமை. |
| (இ) | இருப்புக்கள் | (i) | பொருள் இருப்புப் பதிவேட்டில் பதிவுசெய்யாத களஞ்சியப் பொருட்கள் காணப்பட்டமை. |
| | | (ii) | ஏலத்தில் அகற்றப்பட்ட களஞ்சிய பொருட்கள் பதிவேடுகளிலிருந்து அகற்றப்படாமை |